[2019 ஜூலை 12

(ஈ) 'நம்பிக்கை இணையம்' கட்டமைப்பு ஏற்படுத்துதல் மற்றும் 'மக்களைத் தேடி அரசு' திட்டம் செயல்படுத்துதல் குறித்த தகவல் தொழில்நுட்பவியல் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இந்த ஆண்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நான் பதிலளிக்கும்போது, நான்காவது தொழில் புரட்சிக்கான தகவல் தொழில்நுட்பங்களின்மூலம் தமிழ்நாட்டின் மின் ஆளுமையை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்திருந்தேன். அதன் அடிப்படையில்,

1. வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பங்களில் ஒன்றான "நம்பிக்கை இணையம்" மூலம் பரிவர்த்தனைகளில் உள்ள உண்மைத் தன்மையினை அறிந்திடும் வகையில், தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் சுமார் 40.80 கோடி ரூபாய் செலவில் நம்பிக்கை இணைய கட்டமைப்பு ஒன்று அமைக்கப்படும். இத்தொழில்நுட்பத்தில் சேகரிக்கப்படும் தகவல்கள் மற்றும் தரவுகளை மாற்ற இயலாத காரணத்தால், அரசின் தரவுகள் அனைத்தும் பாதுகாப்பாக வைத்திட இயலும்.

2. அரசுத் துறையில் பல்வேறு சேவைகளைப் பெற பொதுமக்கள் அத்துறை சார்ந்த அலுவலகங்களுக்குச் சென்று விண்ணப்பித்து பெறுவது மட்டுமல்லாமல், அரசு இ-சேவை மையங்கள், இணையதளம் மற்றும் கைபேசி செயலி வாயிலாகவும் விண்ணப்பித்து பெற்று வருகின்றனர். தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் "மக்கள் எண்" உருவாக்கப்பட்டுள்ளது. இதன்வாயிலாக, ஒவ்வொரு நபருக்கும் பிறப்பு முதல் இறப்பு வரையிலான சட்டப்படியான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் குடிமக்கள் பெட்டகத்திலிருந்து விண்ணப்பிக்காமலேயே குறிப்பறிந்து, தானாகவே வழங்கப்படும். இதனைப் பெற்றிட, தனிநபர் தன்னுடைய கைபேசி எண்ணை பயனர் குறியீடாகவும், ஒரு முறை கடவுச் சொல்லைப் பயன்படுத்தியும் பெற்றுக்கொள்ளலாம். "மக்களைத் தேடி அரசு" என்ற இந்தத் திட்டம் 90 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)